
01.02.2017

தினமணி

**கலப்பினப் பசுவின் பாலால் புற்றுநோய் என்பது வதந்தி - விவசாயியின் பகிரங்க கடிதம்!**




ஐயா,

நான் ஒரு விவசாயி. இன்று நாட்டு மாட்டுப்பால்; ஜெர்சி மாட்டுப்பால் என்று பெரும் சர்ச்சை நடந்து கொண்டு உள்ளது. வாட்ஸ் -அப் மற்றும் தொலைக்காட்சி விவாத மேடைகளில் அதிகம் விமர்சிக்கப்படுகிறது. வாட்ஸ் -அப் மற்றும் தொலைக்காட்சி விவாத மேடைகளில் கருத்தை பகிர்ந்து கொள்பவர்கள் ஒரு சதவீதம் பேர் கூட கால்நடைகளை வளர்த்து அனுபவப்பட்டு இருந்திருக்கமாட்டார்கள் என்பது என் கருத்து. எனக்கு வயது 52 ஆகிறது. நான் பிறக்கும் போதே என் வீட்டில் எருமை, நாட்டுப்பசு இருந்தன. இவற்றின் குணங்களை நன்கு அறிவேன். எருமை நாட்டுப்பசு இனங்கள் பொதுவாக மூர்க்கத்தனம் வாய்ந்தவை. நம் முன்னோர்கள் அவற்றை பழக்கி பால் உற்பத்திக்காக வீட்டில் வளர்த்தனர்.

காலப்போக்கில் உழவனின் உற்ற நண்பனாகவும் தாயாகவும் வலம் வந்தது. சிறிது காலம் வளர்த்து விற்றுவிட்டால் எத்தனை வருடங்கள் ஆனாலும் மறக்காமல் பாசமாக கத்தும். மிகுந்த ஞாபக சக்தியுடனும் இருக்கும். கன்று இல்லாமல் பால் கறக்க முடியாது. ஒரு வேளை பிறக்கும் போது கன்று இறந்துவிட்டால் அந்த கன்றின் தோலை பதப்படுத்தி பொய் கன்று போல் உருவம் செய்தால் மட்டுமே பால் கறக்க முடியும்.

அதேபோல் பாம்பு போன்ற கொடிய விஷ ஜந்துக்கள் அவற்றின் இருப்பிடம் வந்தால் வித்தியாசமாக கத்தும். அதை வைத்து நாம் கவனமாக இருக்கலாம். அன்னியர்கள் பண்ணைக்கு வந்தால் கூட வேறு விதமாக கத்தும். இது கால்நடை பராமரிப்பவர்கள் அறிந்து கொள்ள உதவும். இக்குணங்கள் அனைத்தும் நான் அனுபவப்பூர்வமாக பார்த்து பழகியது. சில நிகழ்வுகளை

நேரடியாக பார்த்து ஆச்சரியப்பட்டதுண்டு.

காலப்போக்கில் குளம், குட்டைகள் கானல் நீராகிவிட்ட காரணத்தினால் எருமையினம் குறைந்தேவிட்டது. நாட்டு பசு இனங்களும் குறைந்து வருகின்றன, நம் மூதாதையர்கள் வேலை திறன் மிக்க எருதுகளை உற்பத்தி செய்வதில் மட்டுமே கவனம் செலுத்திவிட்டனர். நம் மக்கள் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பால் வர்க்க பசுவினங்களை உற்பத்தி செய்ய முன் வராததால் தான் வெளிநாட்டிலிருந்து ஜெர்சி காளை பெறப்பட்டு அவற்றுடன் நாட்டுப்பசு இனச்சேர்க்கை செய்யப்பட்டு கலப்பினப்பசு இனம் ஒன்று புதிதாகப் பரிணமித்தது.

அந்தக் கலப்பினம் தான் இப்பொழுது மக்களின் பால் தேவையை பூர்த்தி செய்து வருகிறது. ஆனால் நாட்டின மாடுகள் கடின வேலைக்கும், உழவுக்கு பாரம் ஏற்றிச்செல்லவும், ஜல்லிக்கட்டு போன்ற வீர விளையாட்டுகளில் ஈடுபடுத்தப் பட்டும் பெயர் பெற்று விளங்குகிறது. இதுவும் இல்லையென்றால் இந்த இனம் அழிந்துவிடும் நிலையில் உள்ளது என்பது நிஜமே.

நாட்டின மாட்டில் இருந்து பெறப்பட்ட கலப்பின பசுக்களுக்கும் அழிவு ஏற்படுத்த வாட்ஸ்-அப் போன்ற வலைதளங்களில் வதந்தி பரவி வருகிறது. கலப்பினப் பசுவின் பாலை சாப்பிட்டால் புற்றுநோய் சர்க்கரை நோய் வரும் என்று வதந்தி பரப்பிக் கொண்டுள்ளனர்.

அப்படியென்றால் நாட்டுமாடு வைத்து கோசாலை நடத்திய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருக்கும் சரி, அறிஞர் அண்ணாதுரைக்கும் சரி புற்றுநோய் வந்தது எப்படி? ஏன் இவர்கள் இறக்கும் போது கலப்பினப்பசுக்களே வரவில்லையே? அல்லது நாட்டுப்பசுக்கள் காரணமா?

அவ்வளவு ஏன் நம் நாட்டில் உள்ள 99 சதவிகிதம் பேர் கலப்பின பசுவின் பால்தான் அருந்துகின்றனர். எல்லோருக்குமா புற்றநோய் சர்க்கரைநோய் வந்திருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று மட்டும் கூறுகிறேன். மேலை நாடுகளில் ஜெர்சி பசுவின் பாலை அருந்தித்தான் ஒலிம்பிக்கில் பதக்கப்பட்டியலில் முன்னிலை வகிக்கின்றன. நாம் தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக்கொண்டு பதக்கபட்டியலில் இடம் பெறுவதற்கு படாத பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். கால்பந்து விளையாட்டில் தகுதிச்சுற்றுக்கு கூட போவதற்கு உடல்திறன் இல்லை.

முன்பு நம் நாட்டில் மேய்ச்சல் நிலங்கள் நிறைய இருந்தது. மாடுகளும் தனக்கு தேவையான சத்துக்களை தானே எடுத்துக்கொள்ளும். அது கொடுக்கும் பாலும் தரமானதாக இருந்தது. ஆனால் இன்று அந்த மேய்ச்சல் நிலங்கள் அனைத்தும்

கட்டிடங்களாகவும், இரசாயனம் கலந்த நிலமாகவும் மாறிவிட்டது. மாடுகளும் தீவனம் கிடைக்காமல் மனிதன் பயன்படுத்திய பாலிதீன் பைகளைக் கூட தின்று விடுகின்றன. இதனால் அது கறக்கும் பால் எப்படி தரமானதாக இருக்கும்?.

அதற்காக நாங்கள் இரசாயனம் கலக்காத பசுந்தீவனம் விளைவித்து கலப்பு தீவனத்திற்கு முன்னோர்கள் பயன்படுத்திய புண்ணாக்கு தவிடு தானியங்களில் இருந்து பெறப்படும் பொட்டு, கம்பு, மக்காச்சோளம் என்று நேரடியாக விளைவித்து அளித்து வருகிறோம். அதன் மூலம் தரமான பாலை பெறமுடியும். நாட்டுப்பசு குறைந்த அளவு பால் கறப்பதால் நீர்சத்து குறைவு. கலப்பினப்பசுவின் பாலில் நீர்ச்சத்து அதிகம். அவ்வளவு தான் வித்தியாசம். கலப்பினப்பசுவில் நமது நாட்டின் பசுவின் மரபணு இருப்பதால் பாலின் சுவை குறையாமல் உள்ளது. இதே போல் தான் நானும் பராமரித்துள்ளேன். என் பண்ணையில் கலப்பினப்பசு ஒன்று 13 கன்று ஈன்று 21 வயதில் இன்னும் திடகாத்திரமாக உள்ளது. (பசுவின் சராசரி வயது 16) அப்படி என்றால் அது கொடுக்கும் பால் எப்படி என்று தெரிந்துகொள்ளலாம்.

அதைவிடுத்து நாட்டு மாட்டுப்பால் A2 வகைப்பால் என்று தேவையற்ற விவாதங்களில் ஈடுபடாமல் நமது விளை நிலங்கள் இரசாயனம், பிளாஸ்டிக் இல்லா நிலமாக மாற உதவுங்கள். கறந்த பால் 5 மணி நேரம் வரை கெடாது. அதற்கு மேல் கெட்டுவிடும். ஆனால் 6 மாதம் வரை கெடாது என்று பால் புட்டிகளில், பிளாஸ்டிக் உறைகளில் இட்டு விற்பனைக்கு அனுப்பும் போது கெட்டுப்போகாமல் இருக்க எவ்வளவு இரசாயனம் கலக்கப்படுகிறது? அதை உண்பது நலம் தானா? எனவே ஒருநாளுக்கு மேல் கெட்டுப் போகாமலிருக்கக் கூடிய அத்தனை பால் வகைகளையும் அட்டவணையிட்டு வைத்துக் கொண்டு அவற்றை உட்கொள்ளும் முன்பு, அதனால் விளையும் உடல் நலக்கேடுகளைப் பற்றி அறிந்து கொள்வதில் கவனம் செலுத்துங்கள்.

"அதோடு அழுதுகிட்டே இருந்தாலும் உழுதுகிட்டே இருக்க வேண்டும்" என்ற பழமொழிக்கு ஏற்ப பாடுபட்டு கொண்டிருக்கும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காப்பாற்றுங்கள் அனுபவப்பட்டவன் என்கிற முறையில் நாட்டுப்பாலுக்கும், கலப்பின மாட்டுப்பாலுக்கும் எந்த ஒரு வித்தியாசமும் இல்லை.

சு.பார்த்திபன், அலங்காநல்லூர்,
செல்: 9865870439.
Email : mani_rv@hotmail.com

**மருத்துவப் பயன்கள் கொண்ட கறிவேப்பிலை**



மருத்துவப் பயன்கள் பல கொண்ட கறிவேப்பிலை சாகுபடியிலும் கணிசமான வருவாய் பெறலாம். பெரும்பாலானோர் கறிவேப்பிலையை மணத்துக்காகப் பயன்படுத்திவிட்டு உணவிலிருந்து அதை தூக்கி எறிகின்றனர்.

கறிவேப்பிலையில் உள்ள சத்துக்களையும், மருத்துவ குணங்களையும் அறிந்தவர்கள் அதை தூக்கி எறிவதில்லை. சுவைத்தும், சவைத்தும் சாப்பிட வேண்டிய அருமருந்து.

சத்துக்கள்: அனைத்து வகை சமையல்களிலும் தவறாது இடம் பெற்றிருக்கும் கறிவேப்பிலையில் 0.66 சத நீர்ச் சத்து உள்ளது. 6.1 சதவீத புரதம், 0.1 சதவீத கொழுப்பு, 0.16 சதவீத மாவுப் பொருள், 6.4 சதவீத நார்ப் பொருள் மற்றும் உடலுக்கு மிகவும் தேவைப்படும் தாது உப்புக்கள் 4.2 சதமும் உள்ளது. இது தவிர குறைந்த அளவில் காணப்படும் சத்துக்களாக 100 கிராம் இலையில் 810 மிலி கிராம் கால்சியம், 600 மிலி கிராம் பாஸ்பரஸ், 3.1 மிலி கிராம் இரும்புச் சத்து, 4.0 மிலி கிராம் வைட்டமின் சி, 2.3 மிலி கிராம் நிகோடினிக் அமிலம், வைட்டமின் ஏ ஆகியவையும் உள்ளன.

மருத்துவப் பயன்கள்: பசியைத் தூண்டி, உண்ணும் ஆவலை வளர்க்கும். செரிப்பதற்கு துணையாக இருக்கும். உடலுக்கு உரமூட்டவல்லது. வெள்ளை அணுக்களின் கிருமியை எதிர்க்கும் ஆற்றலை கறிவேப்பிலையின் சாற்றை அதிகரிக்கச் செய்கிறது. இலையுடன் பிற மருந்துகளைச் சேர்த்து துவையல் செய்து சாப்பிட பித்த வாந்தி, செரியாமை, வயிற்றுளைச்சல் குணமாகும்.

சாகுபடி முறைகள்: கறிப்பிலை சாகுபடிக்கு வடிகால் வசதியுள்ள செம்மண் நிலம் மிகவும் அவசியம். வரிசைக்கு வரிசை 5 அடி, செடிக்கு செடி 5 அடி என்ற இடைவெளியில் நடவு செய்யலாம். ஆண்டுக்கு ஒரு செடிக்கு 20 கிலோ தொழு

உரத்தை பகிர்ந்து இடுதல் வேண்டும். ஒரு மரத்தில் இருந்து ஆண்டுக்கு 100 கிலோ இலை பறிக்கலாம்.

ஒரு கிலோ கருவேப்பிலை ரூ.12-க்கு விலை போகிறது. ஒரு மரத்தில் இருந்து சராசரியாக ஆயிரம் ரூபாய் வருவாய் ஈட்டலாம்.

**வேளாண்மையைப் பெருக்கும் வளர்ச்சித் திட்டங்கள் நிறைந்த பட்ஜெட்: தொழில்வர்த்தக கூட்டமைப்பு**

மத்திய பட்ஜெட்டில் வேளாண்மை மற்றும் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கும் அதிக வளர்ச்சித் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன என்று இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

2017 - 2018 நிதியாண்டுக்கான ஒருங்கிணைந்த மத்திய பட்ஜெட் குறித்து இந்திய தொழில்வர்த்தக கூட்டமைப்பைச் சேர்ந்த வல்லுநர்கள் கூறியது:

ஓராண்டுக்குள் சூரிய மின்சக்தி உற்பத்தியின் மூலம் 20 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் என்பது அதிக பயனைக் கொடுக்கும். 100, 200 மெகாவாட் என்று கூறிக்கொண்டிருந்த நிலையில், 20 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் என்பது அனைத்து தரப்பு மக்களுக்கும் மிகவும் பயனுள்ள அறிவிப்பாகும். ஆனால் ஒரு மாநிலத்தில் இருந்து பிற மாநிலத்துக்கு மின்சாரத்தை எடுத்துச் செல்வதற்கான திட்டங்கள் குறித்த அறிவிப்பு காணப்படாதது ஏமாற்றம்.

ரூ.50 கோடிக்கு குறைவான வருவாயை ஈட்டும் நிறுவனங்களுக்கான கார்ப்பரேட் வட்டி விகிதம் 5 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இந்தியாவைப் பொருத்தவரை சுமார் 70 சதவீதம் சிறு, குறு தொழில் நிறுவனங்கள்தான் அதிக அளவில் செயல்படுகின்றன. எனவே, சிறு, குறு தொழில் முனைவோருக்கு இந்த அறிவிப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

விவசாயத்துக்கும், நீர்ப்பாசனத்துக்கும் ஏற்ற வகையில் பல்வேறு பயனுள்ளத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. வறட்சியினால் பாதிக்கப்பட்டு பல மாநிலங்களில் விவசாயிகள் உயிரிழப்பு அதிகரித்து வரும் நிலையில், இதுபோன்ற வளர்ச்சித் திட்டங்கள் மிகவும் அவசியம்.

சுகாதாரத் துறையில் காசநோய், காலரா, தொழுநோய் உள்ளிட்டவற்றை ஒழிப்பதற்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில்

மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அரசு மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்தவும் நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆனால் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோர் தங்கள் 86 சதவீதம் பேர் கட்டணத்தை தங்கள் வருமானத்தில் இருந்து செலுத்தி வருகின்றனர். இவற்றைக் குறைப்பதற்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் குறித்த அறிவிப்புகள் ஏதும் வெளியிடப்படவில்லை.

மேலும் உத்தரப்பிரதேச மாநிலத் தேர்தலை மையப்படுத்தி, எவ்வித அறிவிப்புகளும் வெளியிடப்படாதது ஆரோக்கியமானது என்று தெரிவித்தனர். இந்திய தொழில்வர்த்தக கூட்டமைப்பின் தமிழ்நாடு பிரிவு துணைத் தலைவர் பி.ரவிச்சந்திரன் கூறியது: அதிர்ச்சியூட்டும் வகையில் பட்ஜெட்டில் எவ்வித எதிர்மறை அறிவிப்புகள் இல்லை.

வேளாண் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் நபார்டு வங்கியுடன் இணைந்து பாசனத் திட்டங்களை செயல்படுத்தும் அறிவிப்பு வெளியாகியுள்ளது. மேலும் 2022-ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கவும், பதப்படுத்தும் தொழில்களை முன்னேற்றும் வகையில் பால் பொருள்கள் உற்பத்தி, விவசாயிகளுக்கான காப்பீட்டுத் திட்டம் வரவேற்கத்தக்க அம்சங்களாகும்.

மேலும் நாட்டின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 26 சதவீதம் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டமைப்பு மேம்படும்போது, நாட்டில் நுகர்வு அதிகரிக்கும். நுகர்வு அதிகரித்தால், புதிய தொழில்கள் தொடங்கப்படும். அதன் காரணமாக வேலை வாய்ப்புகள் பெருகும்.

அரசியல் கட்சிகளுக்கு நிதி அளிப்பதில் கட்டுப்பாடு உள்ளிட்ட பணமதிப்பு நீக்க நடவடிக்கைகள் பட்ஜெட் அறிவிப்பிலும் தொடர்கின்றன. எனவே, நிதியமைச்சர் கூறியபடி மார்ச் மாதத்துக்குப் பிறகு இந்தியப் பொருளாதாரம் அதன் வளர்ச்சிப் பாதையில் தடையில்லாமல் செல்லும் என்று தெரிவித்தார்.